**தலைப்பு 07 – நீதிச் சேவை ஆணைக்குழு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீதிச் சேவை ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பறிக்கை 2020 யூன் 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந்நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவனத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை

தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் .

## 1.6 நிதிக்கூற்றுக்கள்

### 1.6.1 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| பௌதீகச் சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகள் கைப்பற்றுதல் சம்பந்தமாக செலவிடப்பட்ட தொகை ரூபா 3,187,258 என்பதுடன் அத்தொகை காசுப்பாய்ச்சல் கூற்றின் (ஏசீஏ-சீ படிவம்) முதலீட்டுச் செயற்பாடுகளினால் உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் ரூபா 2,976,258 ஆக காட்டப்பட்டமையால் செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 211,000 ஆக குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட செலவு காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாகக் குறிப்பிடப்பட வேண்டியமை. | 2020 ஆம் வருடத்திலிருந்து திருத்தப்படும். |

### 1.6.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாகக் காட்டப்பட்டுகிறது.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | பரிந்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) | வாகன விபத்துக்கள் 02 தொடர்பாக ஆரம்ப அறிக்கை பெறப்பட்டிராமையுடன் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு 5 மாதங்கள் மற்றும் 06 மாதங்கள் தாமதம் ஏற்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்விபத்துக்களுக்கான ஆரம்ப அறிக்கை எம்மால் சமர்ப்பிக்கப்படவில்லை. நிதிப்பிரமாணம் 104(4) பிரகாரம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 05, 06 மாதங்கள் எடுக்கப்பட்டது. எதிர்காலங்களில் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் விரைவில் அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 1646 | பயணங்கள் தொடர்பான மாதாந்தப் பொழிப்புக்களின் மூலப் பிரதிகளுடன் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கண்ககாய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2020 வருடத்திலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 03.1 ஆம் பிரிவு | ஆணைக்குழுவிற்கு உரித்தான வாகனங்களுக்கு எரிபொருள் பரிசோதனை நடாத்தப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இலக்கம் KR-5692 மற்றும் இலக்கம் KX-6732 ஆன வாகனங்கள் சம்பந்தமாக நிதி அமைச்சின் மூலம் பொறுப்பேற்கப்பட்ட KR-2383 ஆம் இலக்க மோட்டார் வாகனம் மற்றும் KR-2435 ஆம் இலக்க மோட்டார் வாகனம் சம்பந்தமாக எரிபொருள் பரிசோதனை எதிகாலத்தில் முறையாகச் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

2. நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| மீண்டெழும் செலவின விடயங்கள் 03 இற்கான மொத்த தேறிய ஒதுக்கம் ரூபா 780,000 என்பதுடன் அச்செலவின விடயங்களுக்கான மொத்தச் செலவுகள் ரூபா 113,396 என்பதால் ரூபா 666,604 ஆன தேறிய சேமிப்பு, தேறிய ஒதுக்கத்தின் நூற்றுக்கு 74 இலிருந்து நூற்றுக்கு 95 வரையிலான வீச்சில் சதவீதத்தைக் காட்டியது. மேலும் ஒரு மூலதன செலவு விடயத்திற்கு தேறிய ஒதுக்கம் ரூபா 2,000,000 என்பதுடன் அச்செலவ விடயத்திற்கான மொத்தச் செலவு ரூபா 5,920 என்பதால் சேமிப்பு ரூபா 1,994,080 ஆன பெறுமதி தேறிய ஒதுக்கத்தின் நூற்றுக்கு 99 ஆன சதவீதமாகும். | நிதிப்பிரமாணம் 50 இல் காட்டப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சிக்கனம் மற்றும் செயற்திறன் என்பவற்றைக் கருத்திற் கொண்டு சரியாகச் செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியமை. | உள்நாட்டு பயணச் செலவுகள் மட்டுப்படுத்தப் பட்டமை, சீருடைகளுக்கு உரித்தான அலுவலர்கள் குறைவடைந்தமை, தற்காலிக கட்டிடத்தில் நிறுவனம் நடாத்திச் செல்லப்படுவதனால் தேவையான பராமரிப்பு மற்றும் மேற்கொள்ளப் பட்டமை, கட்டிட நிர்மாணம் காலதாமதம் ஆகியவை போன்ற விடயங்கள் சேமிப்புக்கான காரணங்கள் ஆகும். |

2.2 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்ப்பனவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 வரையில் 02 வருடங்களுக்கு அதிகமான காலமாக ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 185,000 ஆன கடன் நிலுவை காணப்பட்டது. | நிலுவைக் கடன் மிகுதிகள் காலதாமதமின்றி அறவிடப் படுபவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தருக்கு மொத்த தொகையைச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தும் பதில் எதுவும் கிடைக்காமையினால் அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2019 (உ) இன் பிரகாரம் நாட்பட்ட கடன் மிகுதிகள் சம்பந்தமாகப் பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்படும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2006(5.6) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் மனுக்கள் கோரப்படும்போது தயாரிக்கப்படுகின்ற மனுக்கோரல் கடிதங்களில் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பொருட்களின் விபரக் குறிப்புக்கள் திட்டவட்டமாக காட்டப்பட வேண்டிய போதிலும், 2019 யூலை 19 ஆந் திகதி பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட மனுப் பத்திரங்களில் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வாயுச் சீராக்களுக்கான பயன்பாட்டு முறை தெளிவாக காட்டப்படாது 2019 யூலை 30 ஆந் திகதி பக்ஸ் செய்தியினுடாகத் தேவையான பயன்பாட்டு முறை மனுதாரர்களுக்கு காட்டப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2006(5.6) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு எதிர் பார்க்கப்படுகின்ற பொருட்களுக்கான விவரக் குறிப்புக்கள் திட்டவட்டமாகக் காட்டப்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவிற்கு உரித்தான மோட்டார் சைக்கிள் மற்றும் ஒரு மோட்டார் வாகனம் என்பன 3½ வருடங்கள் மற்றும் 2 வருட காலமாக விளைவற்றதாகக் காணப்பட்டன. | திருத்தம் செய்ய முடியுமான நிலையில் காணப்படும் வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்டு ஓடுவதற்குப் பயன்படுத்துவதற்கும் அகற்றக் கூடிய நிலையில் காணப்படும் வாகனங்கள் முறைப்படி அகற்றப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | WPJX-0875 ஆம் இலக்க SUZUKI HJ 125 K மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பக் கல்லூரிக்கு வழங்கப்படுவதற்கு முன்னர் நிரந்தரமாக அகற்றப்படல் வேண்டும். இந்நடவடிக்கைக்காக மோட்டார் வாகனத் திணைக்களத்தின் பொருத்தமான ஆய்வாளரை ஈடுபடுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. |

| | | |
|---|---|---|
| | | WPKJ - 5005 இலக்க Jaguar X-Type Classic மோட்டார் காரின் நிலைமைக்கான பரிசோதனை அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக மோட்டார் கார் ஆய்வாளரைப் பெற்றுக் கொள்வதற்காக பல சந்தர்ப்பங்களில் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டும் பெற்றுக் கொள்ள முடியாமல் போனது. 2020 சனவரி 27 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உத்தியோகத்தர் ஒருவரை பெற்றுக் கொள்வதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (ஆ) ஆணைக்குழச் செயலக அலுவலகம் அமைந்துள்ள 0.0959 ஹெக்டயர் ஆன காணிப் பகுதியின் சட்டரீதியான உரிமையைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காணியின் சட்ட ரீதியான உரிமையைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கொழும்பு பிரதேச செயலக அலுவலகத்தினால் காணியைப் பொறுப்பேற்பதற்கு உரிய பரிந்துரை மாகாண காணிகள் ஆணையாளருக்கு 2020 பெப்ரவரி 24 ஆந் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறிப்பிட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 3.3 இழப்புக்களும் நட்டங்களும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஏற்பட்ட 02 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு(i) இன் நட்டங்கள் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் வருடத்திற்குள் நட்டங்கள் அறவிடப்பட்டமை / நீக்கப்பட்டமை / கைவிடப்பட்டமையின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன விபத்துக்களுக்கான தகவல்கள் குறிப்பு(i) இன் நட்டங்கள் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் குறிப்பிடப்பட வேண்டியமை. | 2020 ஆம் ஆண்டில் திருத்தப்படும். |

### 3.4 முகாமைத்துவப் பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 சனவரி 24 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் பிரகாரம் அரச நிறுவனங்களில் மனிதவள அபிவிருத்தி செய்தல் எனும் தலைப்பில் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | 2018 சனவரி 24 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் பிரகாரம் 2020 வருடத்திற்காக நீதிச் சேவைகள் ஆணைக்கழுவின் செயலக அலுவலகம் தொடர்பான மனிதவள அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முழுமையான பதவியணயினரின் வெற்றிடங்கள் 71 ஆகும். அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் நூற்றுக்கு 60 சதவீதத்தைக் கொண்டிருந்தது. | தேவையான பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அந்த 71 வெற்றிடங்களில் 17 நீதித்துறை அதிகாரிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட பொது அதிகாரிகளின் சேவைக்கு உரித்தான அலுவலகர்களால் நிரப்பப்பட்டுக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டமையுடன் ஒரு பதவிக்கான வெற்றிடமானது ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஒரு அலுவலரினால் நிரப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை விட அதிகமான உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை 18 ஆகும். | மிகையான ஊழியர்களை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | விடை அளிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழாமிற்கு உரித்தற்ற நீதிமன்றப் பதிவாளர் பதவிக்காக 5 அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | தேவையின் பிரகாரம் பதவிகள் அங்கீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | உதவிச் செயலாளருக்கான 04 பதவிகளுக்கான கடமை நடவடிக்கைகள் நீதிமன்றப் பதிவாளர் சேவையின் அலுவலர்களினால் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |